செய்தி வெளியீடு எண். 811 நாள்—09 .11.2009

# செய்தி வெளியீடு

## நீலகிரி மாவட்டத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு எட்டு இலட்சம் ரூபாய் நிவாரண நிதி

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!

**நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் பெருமழையின் காரணமாக பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகளின் இடிபாடுகளில் சிக்கி எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். இச்செய்தியை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிர்ச்சி அடைந்து, உயிரிழந்தோர் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்கள். உயிரிழந்தோர் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் எட்டு இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

* * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9